**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 96/2020 |
| Name | : Leo Andrews |
| P.W. | : 2 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.07.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் மற்றும் தோகைமலை வட்ட உணவு பாதுகாப்பு அலுவலராக தற்போது பணிபுரிந்து வருகிறேன். நான் திருப்பூர் மாவட்டம் தாராபுரம் நகராட்சி பகுதியில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து கொண்டிருந்த போது முன்னாள் மடத்துக்குளம் மற்றும் குடிமங்கலம் வட்டார உணவு பாதுகாப்பு அலுவலர் அவர்கள் பொது சுகாதார துறைக்கு மாற்றப்பட்டார். அவர் மாற்றப்பட்ட பின் எனக்கு மடத்துக்குளம் மற்றும் குடிமங்கலம் கூடுதல் பொறுப்பாக தரப்பட்டது. முன்னாள் பாதுகாப்பு அலுவலர் லோகநாதன் அவர்கள் கடந்த 19.11.2018 அன்று விஜயகுமார் த/பெ.தங்கவேல், நாடார், பொள்ளாச்சி கோவை மாவட்டம் என்பவர் தனது வாகனத்தில் வாகன எண். TN 41 AH 1458 வாகனத்தை சோதனையிட்ட போது டீ தூள் வைத்து விற்பனை செய்துள்ளார். அதில் கலப்படம் இருக்கும் என சந்தேகப்பட்டு அன்றைய உணவு பாதுகாப்பு அலுவலர் அவர்கள் உணவு மாதிரி எடுத்து மதுரை பகுப்பாய்வு கூடத்திற்கு பகுப்பாய்விற்காக அனுப்பி வைத்தார். மேலும் உணவு பகுப்பாய்வாளரின் அறிக்கையில் டீ தூள் உடலுக்கு பாதுகாப்பற்றது என்ற அறிக்கை மாவட்ட நியமன அலுவலரிடமிருந்து பெறப்பட்டு இறுதி அறிக்கை தயார் செய்யப்பட்டு உணவு பாதுகாப்பு ஆணையர் சென்னை அவர்களுக்கு

ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. **30.09.2019 தேதியிட்ட உணவு பகுப்பாய்வு அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும் மற்றும் 03.10.2019 தேதியிட்ட உணவு பாதுகாப்பு பிரிவு நியமன அலுவலரின் அறிவிப்பு அ.சா.ஆ.12 ஆகவும் மற்றும் 04.10.2019 தேதியிட்ட எதிரிக்கு அறிவிப்பு அனுப்பப்பட்ட அஞ்சலக ரசீது அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆணையர் அவர்கள் பரிசீலித்து வழக்கு தொடர கடந்த 10.12.2019 அன்று எனக்கு உத்திரவிட்டார். **10.12.2019 தேதியிட்ட வழக்கு தொடர ஒப்புதல் கடிதம் அசல் அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அதன் அடிப்படையில் இந்த வழக்கு இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இந்த வழக்கில் நான் எந்த சோதனையும் செய்து உணவு பொருள் எதுவும் கைப்பற்றவில்லை. இறுதி அறிக்கை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். ஏற்கனவே இருந்து ஆவணங்கள் அடிப்படையில் புகாரை நான் தான் தாக்கல் செய்தேன். நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அரசாணையில் அ.சா.1 ன் பெயர் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 இந்த பகுதியில் வேலை செய்து பணி மாறுதல் பெற்றுச் சென்றதாக காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரின் 13 வது பத்தியில் அறிவிப்பு எதிரிக்கு அனுப்பி பெறப்பட்டதாக சொல்லியுள்ள ஒப்புகை அட்டை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். புகாரின் 14 வது பத்தியில் பகுப்பாய்வு அறிக்கை பெறப்பட்ட பின்பு எதிரி தனக்கு மீண்டும் பகுப்பாய்வு செய்வதற்கு ஒப்புதல் இல்லை என்று கூறியதாக சொல்லும் கடிதத்தை வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் முன்னுக் பின் முரணாக உள்ளது என்றால் சரியல்ல. நான் வழக்கு ஆவணங்களை முறையாக பார்வையிடாமல் அதன் உண்மைத் தன்மை ஆராயாமல் அவசர கதியில் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/–M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்